Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி – 29 | 11–04–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை – 53

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்,
யாழ் சாலை, கிளிநொச்சி. (சி-9440)
R.V பந்தல் சேவை, தர்மபுரம்.

# தமிழர் தாயகத்திலிருந்து கருணாவை வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## -அரசியல்துறையினர் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தினால் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணா தொடர்ந்தும் தலைமைப்பீடத்திற்கு எதிரான செயற்பாடுகள் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார். இந் நிலையில் பொதுமக்களையும், போராளிகளையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்கு தலைமைப்பீடம் தள்ளப்பட்டுள்ளது. எனவே கருணாவை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தமிழீழ அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தினால் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட கருணா தொடர்ந்தும் தலைமைப்பீடத்திற்கு எதிரான செயற்பாடுகள் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார். இதற்கு உந்தலாக தமிழ்த்தேசியத்திற்கு விரோதமான சக்திகளும் பின்புலத்தில் செயற்படுகின்றன.

கருணாவினால் இயக்கநடைமுறைக்கு எதிராக தோற்றுவிக்கப்பட்ட குழப்பத்தை எமது தலைமைப்பீடம் இரத்தக் களறி, உயிரிழப்புக்கள் இன்றி சுமுகமான நிலைக்கு கொண்டுவருவதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. ஆயினும் போராளிகள் தமது சுயவிருப்பத்தின் பெயரில் வெளியேறி இயக்கத்துடனோ அன்றி பெற்றோருடனோ இணைந்துகொள்வதற்கு தடையாக இருப்பது மட்டுமல்ல. போராளிகளை அழிப்பதற்கான செயற்பாடுகளிலும் இறங்கியுள்ளார். இந்நிலையில் பொதுமக்களையும், போராளிகளையும் பாதுகாக்கவேண்டிய நிலைக்கு தலைமைப்பீடம் தள்ளப்பட்டுள்ளது. எனவே கருணாவை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச்சந்தர்ப்பத்திலும் அனேக போராளிகள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வாகரைப் பிரதேசம் முற்றாகப் புலிகளால் மீட்பு

# இடம்பெயர்ந்தோர் மீளக்குடியேற ஆரம்பம்!

## 2ஆம் நாளில் பெரும் மோதல்கள் ஏதும் இல்லை

(மட்டக்களப்பு)

**விருதலைப்புலிகளின் மீட்புப் படையணிகளினால் கருணாவின் கட்டுப்பாட்டிலிருந்து வாகரைப் பிரதேசம் முற்றாக மீட்கப்பட்டுள்ளது. இரண்டாம் நாளான நேற்று அங்கு பெரும் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. இதேசமயம், மோதல் குறித்து அச்சம் காரணமாக தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறிய மக்கள், மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.**

நேற்று முன்தினம் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட மீட்பு நடவடிக்கையைத் தொடர்ந்து வாகரைப் பிரதேசம் முற்றிலுமாக புலிகளால் மீட்கப்பட்டது.

வெருகலில் இருந்து பனிச்சம் கேணிவரையில் விடுதலைப்புலிகளின் அணிகள் முன்னேறியிருப்பதாகவும், கருணா குழுவில் இருந்த போராளிகள்.பலர் புலிகளின் மீட்புப் படையினால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்துவாகரையில் நிலைகொண்டிருந்த கருணா குழுவின் சிறு பகுதியினர் தப்பியோடி வெலிக்கந்த பகுதியில் இருந்ததாக

(08 ஆம் பக்கம் பார்க்க)

## -கருணாவின் பிடியிலிருந்து-

# தனித்தனியாகவும் குழுவாகவும் போராளிகள் வெளியேற்றம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மீட்புப்படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கருணாவின் பிடியிலிருந்த மேலும் பலர் விலகிவருவதாக அங்கிருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.தனித்தனியாகவும் சிறுசிறு குழுக்களாகவும் இவர்கள் வெளியேறுகின்றனர். நேற்று கதுறுவெலவிலிருந்து (பொலநறுவ) புறப்பட்ட பஸ் ஒன்றில் வெலிக்கந்தவிலிருந்து ஏறிய 25 பேர் கொண்ட பெண்போராளிகள் பாண்டிருப்பில் இறங்கி தமது சொந்த வீடுகளை நோக்கிச் சென்றதாக தெரியவருகிறது.

## -படுவான் கரைப் பகுதியில்-

# கருணா குழுவைச் சார்ந்த மூவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டு.படுவான்கரைப்பகுதியில் விடுதலைப்புலிகளின் மீட்புப்படையினரின் தாக்குதலில் தும்பங்கேணியில் இருவரும், கொக்கட்டிச்சோலையில் ஒருவருமாக கருணாகுழுவைச் சார்ந்த மூவர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தும்பங்கேணி சம்பவத்தில் உயிரிழந்தோர் சசிகுமார் மற்றும் பரணி என இன்னுமோர் தகவல் தெரிவிக்கின்றது.

கொக்கட்டிச்சோலை மற்றும் அதனையண்டிய பகுதிகளில் இருந்து கருணாவின் பிடியிலிருந்து பலர் விலகிச் செல்வதாக தெரிய வருகிறது.

# மட்டு.போதனா வைத்தியசாலையிலிருந்து சிங்கள வைத்தியர்கள் வெளியேற்றம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய சிங்கள வைத்தியர்கள் தமது பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நேற்று தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

வைத்தியசாலை பணிப்பாளர் தேவராஜன் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

22 உள்ளக மருத்துவர்கள் உட்பட 30 வைத்தியர்கள் வெளியேறியுள்ளனர் எனவும் இதனால் வைத்திய சேவைக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்தவாரம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# காவலரண்கள் புனரமைப்பு

வவுனியா-மன்னார் வீதியிலுள்ள முன்னரங்க காவல் நிலைகளினை இராணுவம் பலப்படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. பம்பைமடு பகுதியிலிருந்து பறையனாளங்குளம் வரையிலான சுமார் 20 கிலோமீற்றர் தூரத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஊழியர்கள் மீது கெடுபிடி

வலிகாமம் வடக்கில் உள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இயங்கிவரும் அரச திணைக்களங்களில் கடமையாற்றுவோர் தமது கடமைகளுக்குச் செல்லும் போது படையினரின் பல்வேறுபட்ட கெடுபிடிகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

தெல்லிப்பளை பிரதேச செய

(08 ஆம் பக்கம் பார்க்க)

# 31 அமைச்சர்கள் 31 பிரதி அமைச்சர்கள் நேற்று சத்தியப்பிரமாணம்

## – ஜே.வி.பி. யினர் அடங்கவில்லை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் புதிய அமைச்சர்கள் 31பேர் நேற்றுமாலை பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். இதன் போது புதிய அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்களாகவும் 31பேர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். இதில் ஜே.வி.பி.உறுப்பினர்கள் எவரும் உள்ளடங்கவில்லை.

இந்நிகழ்வு சனாதிபதி மாளி

(08 ஆம் பக்கம் பார்க்க)



நிதியமைச்சராக சரத்அமுனுகம பதவியேற்கிறார்.

## ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியலில்

# பதினொரு பேரில் ஏழுபேர் ஐ.தே.கட்சி சாராதோர்!

சிறிலங்காவின் 13 வது நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளுக்கு அமைய ஐக்கிய தேசியக்கட்சிக்கு கிடைத்த பதினொரு தேசியப்பட்டியல் உறுப்பினர் விபரங்களை ஐ.தே.க. நேற்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்துள்ளது. இதில் ஏழு உறுப்பினர் ஐ.தே.கட்சி அல்லாதவர்களாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த இருவரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த நால்வரும், மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்குகின்றனர் என ஐ.தே.கட்சியின் பொதுச செயலாளர் சேனரல் கப்புக்கொட்டுவ தெரிவித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர்கள் சத்தியப்பிரமாணநிகழ்வில் ஜே.வி.பி.யினர் கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் புதிய அரசாங்கத்தின் புதிய அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த எவரும் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ளவில்லை. அவர்கள் பங்குகொள்ளவுமில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் ஏப்ரல் வீரர்கள் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதால் அவர்கள் அன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை என சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகம் எரிக்பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

மரியநாயகம் பிரான்சிஸ்ரா மணற் குடியிருப்பு முல்லைத்தீவு எனும் முகவரி கொண்ட எனது அ.அட்டை போ.க. பிரிவின் பாஸ் செபப்புத்தகம் ஆகியன அடங்கிய பேஸ் ஒன்று முள்ளியவளை வழியாக புதுக்குடியிருப்பு சென்ற பேருந்தில் 07.04.2004 அன்று தவறிவிட்டது கண்டெடுத் தவர்கள் புது. ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (4072)

### தவறிவிட்டது

இராமசாமி கோவிந்தராசா ஆகிய எமது வங்கி வைப்புப்புத்தகம் 02, தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய பொதி 08.04.2004 ஆம் திகதி பாண்டியன் குளத்திற்கும், பாலையடிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மல்லாவியில் உள்ள ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றார். சன்மானம் வழங்கப்படும். (4121)

# இராணுவம் நடத்தும் விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்ளாதிருக்க மக்களிடம் கோரல்

"சிறிலங்கா இராணுவத்தினரினால் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் எவற்றிலும் பொதுமக்கள் எவரும் கலந்துகொள்ளக் கூடாதென" கோரும் சுவரொட்டிகள் பல குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

முக்கிய சந்திகள் மற்றும் நகரப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டிகளில் "சிறிலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்படும் எந்தவொரு விளையாட்டுப் போட்டிகளிலும் தனிநபர்களோ அல்லது விளையாட்டுக்கழகங்களோ பங்கெடுக்கக்கூடாதென" கோரப்பட்டுள்ளது. மீறிச் செயற்படின் கடும் நடவடிக்கைகளுக்கு அந்நபர்களோ, விளையாட்டுக்கழகங்களோ உள்ளாக வேண்டியிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டது முதல் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களிடையேயான விளையாட்டுப்போட் டிகளைப் படைத்தரப்பு நட்ாத்திவருகின்றது. குறிப்பாக அவ்வப்பகுதி களில் நிலைகொண்டுள்ள படைப் பிரிவுகளே இவ் விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடுசெய்துவருகின்றன. (27)

# அன்னை பூபதி நினைவாக பரந்தன் பகுதியில் சிரமதானம்

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவினையொட்டி பரந்தன் குமரபுரம் கிராமத்தில் பொது இடங்களில் நேற்று முன்தினம் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப் பெற்றது.

குமரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கமும், பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவையும் இணைந்து குமரபுரம் டி. 5 கமரிக்குடா, காஞ்சிபுரம் ஆகிய கிராமங்களினால் குமரபுரம் கிராம அபிவிருத்திச்சங்க புதிய கட்டட வளாகத்தில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பெற்றது.

பெருந்திரளான மக்கள் மேற்படி சிரமதானப் பணியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் 2004ஆம் ஆண்டு பாடசாலை செல்லாத மாணவர்கட்கான விழிப்புணர்வுக்கருத்தரங்கு எதிர்வரும் 20.21,22,23,24,25 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. 20ஆம்திகதி தண்ணிமுறிப்பு கிராமத்திலும், 21ஆம் திகதி குமுழமுனை மத்திக்கிராமத்திலும், 22ஆம் திகதி முறிப்பு கிராமத்திலும் 23ஆம் திகதி பூதன்வயல் கிராமத்திலும்,24ஆம் திகதி முள்ளியவளை மத்தி தெற்குகிரா மத்திலும் 25ஆம் திகதி புதளிகுடா கிராமத்தில் நடைபெற உள்ளது.

இவற்றுடன் மூன்று கிராமங்களுக்கு உணவற்றபொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளது.

27ஆம் திகதி ஆறுமுகத்தான் குளக்கிராமத்திலும், 27ஆம் திகதி முறிப்புக்கிராமத்திலும் 29ஆம் திகதி பூதன்வயல் கிராமத்திலும் பொருட்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

### – திருமலை மாணவர் நலன்புரி நிதியத்தின் –

# நிதிஉதவி பெறும் மாணவருக்கு நுளம்புவலைகள் விநியோகம்

திருகோணமலை மாணவர் நலன்புரிநிதியத்தின் நிதிஉதவியைப் பெறும்மாணவர்களுக்கு, திருக்கோணேஸ்வரம் லயன்ஸ் கழகத்தினால் நுளம்புவலைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இம் மாணவர்களுக்கு லண்டனில் திருமலை இளைஞர்களால் - நடத்தப்படும் ஸ்கைறோஸ் கிரிக்கெட் கழகத்தினால் வழங்கப்படும் நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அப்போதே இலவச நுளம்பு வலை விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

லண்டன் ஸ்கைறோஸ் கிரிக்கெட் கழகப் பிரமுகர் ஆர்.சரவணபவன் சிறப்பு அதிதியாகப் பங்குபற்றினார்.நிதியத்தின் தலைவர் தயாபரன் நிகழ்விற்கு தலைமை வகித்தார்.நிதியத்தின் நிதி உதவியைப்பெறும்சுமார் 60மாணவர்கள் வறுமை, மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்று தெரிவிக்கப்பட்டது. இம் மாணவருக்கு தேவையான பாடசாலைப் பைகள் மற்றும் சப்பாத்துக்களை வழங்குவதற்குத்தேவையான நடவடிக்கைகளை தாம் எடுக்கவிருப்பதாக, லண்டன் ஸ்கைறோஸ் கிரிக்கெட் கழகப்பிரமுகர் சரவணபவன் நிகழ்வில் பங்குபற்றிப் பேசும்போது தெரிவித்தார்.

நிதியத்தின் செயலாளர் சி.சசிகுமார் நிதியத்தின் மேற்கொண்டு வரும் பணிகள் பற்றி விளக்கினார். விக்கினேஸ்வரா மகாவித்தியாலய அதிபர் நா.இராஜநாதன் பேசும்போது போரினால் பாதிக்கப்பட்ட மூதூர்ப் பிரதேசத்தில் குழந்தைகள் நித்திரை கொள்வதற்கு பாய் கூட இல்லாது கஷ்டப்படுவதைத் தான் நேரில் கண்டதாகத் தெரிவித்தார். திருக்கோணேஸ்வர லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் துஷ்யந்தன் நுளம்புவலை விநியோகத்தை மாணவர்களுக்கு வழங்கி ஆரம்பித்துவைத்தார். (25)

# வேகமாக வாகனம் செலுத்திய சாரதிக்கு தண்டனை விதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினரின் சமிக்ஞையினையும் பொருட்படுத்தாது அதிவேகமாகச் சென்ற ஹைஏஸ் வாகனம் ஒன்று காவல்துறையினரால் விரட்டிச்செல்லப்பட்டு இடைமறிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் நேற்றைய தினம் கிளி.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் இடம்பெற்றுள்ளது. யாழிலிருந்து அதிவேகமாக ஏ-9 நெடுஞ்சாலையில் வந்துகொண்டிருந்த ஹைஏஸ் வாகனத்தை தமிழீழகாவல்துறை வாகனப்போக்குவரத்துப் பிரிவினர் நிறுத்தும் படிசமிக்ஞையினை காட்டியபொழுதிலும் மேற்படி வாகனம் நிறுத்தப்படாமல் வவுனியா நோக்கி அதிவேகமாகச் சென்றுள்ளது. உடனடியாக வாகனப்போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி றோய்காந் தலைமையில் விரைந்துசென்ற காவல்துறையினர் பல கிலோமீற்றர்களுக்குஅப்பால்வைத்து ஹைஏஸ் வாகனத்தை இடை மறித்து காவல் பணிமனைக்கு அழைத்து வந்து விசாரணையினை மேற்கொண்டனர்.

அதனையடுத்து மேற்படி வாகனச்சாரதியும், வாகனமும் நேற்றைய தினம் கிளி.மாவட்ட நீதிமன்றில் காவல்துறை வாகனப்போக்குவரத்துப் பிரிவினரால் முற்படுத்தப்பட்ட பொழுது வாகனத்தினை அதிவேகமாக செலுத்திய குற்றச்சாட்டினை ஒப்புக்கொண்ட வாகனச் சாரதிக்கு மாவட்ட நீதியாளரினால் 5000 ரூபா குற்றப்பணம் செலுத்தும் வண்ணம்தீர்ப்புவழங்கப்பெற்றது.(சோ)

# சுண்டிக்குளம் கடற்கரை வீதி மோசமாகச் சேதம்

(அலுவலக செய்தியாளர்)

சுண்டிக்குளம் கடற்கரை வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

சுண்டிக்குளம் சந்தியில் இருந்து கடற்கரையை நோக்கி செல்லும் நீண்ட திறவல் வீதியே இவ்வாறு மிகமோசமாக சேதமடைந்துள்ளது. மேற்படி வீதி புனரமைக்கப்படாமையால் சுண்டிக்குளத்தில் இருந்து தருமபுரம் மருத்துவமனைக்கு அவசர நோயாளர்களை உரிய நேரத்திற்குகொண்டுவரமுடியாதிருப்பதாகவும் சுண்டிக்குளம் கடற்கரையில் பிடிக்கப்படும் பெருமளவான மீன்களை சந்தைப்படுத்துவதற்காக இவ்வாறு சேதமடைந்த வீதியூடாக சந்தைகளுக்கு குறித்த நேரத்தில் கொண்டு செல்லமுடியாதிருப்பதாகவும் கவலைதெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ.தீ)

## முல்லை. மாவட்ட மாதாந்தக் கூட்டங்கள்

முல்லை மாவட்ட கச்சேரி மாதாந்த கூட்டங்கள் இம்மாதம் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் 22 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமும் ந.ப 1.30 மணிக்கு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டமும் பி.ப 3.00 மணிக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபைக் குழுகூட்டமும்

23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அத்தியாவசிய சேவைகள் நிவாரணம் வழங்கல் ஒருங்கிணைப்புக் கூட்டமும்

ந.ப 11.30 மணிக்கு சுற்றாடல் பாதுகாப்புக்குழுக்கூட்டமும் நடைபெறுமென முல்லை மாவட்ட அரச அதிபர் திரு. இமெல்டா- சுகுமார் அறியத்தந்துள்ளார். (20)

## தற்காலிகப் பாலம் அகற்றப்பட்டது

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த இரும்புப்பாலம் தற்போது அகற்றப்பட்டுவருகிறது.

கிளிநொச்சிப்பகுதியை கைப்பற்றும் முகமாக சிங்களப்படைகள் மேற்கொண்ட சத்ஜெய நடவடிக்கையின் போது முற்றாக சேதமடைந்திருந்த கரடிப்போக்குப் பாலம் புனரமைக்கப்படுவதற்காக அதனருகில் இத்தற்காலிகப் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. சேதமடைந்திருந்த பாலம் புனரமைக்கப்பட்டதை அடுத்தே தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த இரும்புப்பாலம் அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டு வருகிறது. (லோ.தீ)

# பூநகரியில் மின்னல் தாக்கி ஒருவர் பரிதாப மரணம்

(பூநகரி)

பூநகரிப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மின்னல் தாக்கி ஒருவர் மரணமானார்.

பி.பகல் 2.30 மணியளவில் பூநகரி 4 ஆம் கட்டையில் உள்ள கறுக்காய்ப்பள்ளம் என்னும் இடத்தி வைரமுத்து சிவராசா (தங்கன்- வயது 40 என்பவரே மின்னல் தாக்கி மரணமானவராவார்

இவர் மழை பெய்துகொண்டிருந்தவேளை தனது மாட்டுவண்டியை தென்னந்தோப்பில் இருந்து கொட்டிலிற்குள் கொண்டு வரமுற்பட்டபோதே இச்சம்பவம் இடம் பெற்றது. (34)


## பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 2004

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய பழையமாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 11.04.2004 (ஞாயிற்றுக்கிழமை) இன்று பி.ப 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். கூட்டத்திற்கு சமுகமளிக்கும் போது இவ்வருடத்திற்கான சந்தாப்பணம் ரூ.50.00 ஐ செலுத்தி உறுப்புரிமை பெற்றுக்கொள்ளவும்.

**செயலாளர்**
**ப.மா.ச.பு.ம.வி.**

(7181)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 1987 07 14

**மறைவு** 2003 04 20

### சந்திரமோகன் கருணாகரன்
**(ரமேஸ்)**

**11 . 04 . 2004**

எம் உள்ளத்துக் குமுறல்களை
உரைத்திட முடியாதையா – உன்
நினைவுகள் எம் நெஞ்சில்
உறைந்திடாமல் ஊற்றாய் பாயுதையா

**11.04.2004 இன்று எமது இல்லத்தில் 1ஆம் ஆண்டு நினைவுநாள் நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: **குடும்பத்தினர்**

*தற்போதைய முகவரி:*
*ஆ.ஏசன் இல:98.*
*ஜெயந்திநகர்.*
*கிளிநொச்சி.*

*நிரந்தர முகவரி:*
*புதிய செம்மணி வீதி.*
*ஆனந்தபுரம்.*
*கல்வியன்காடு.*

(4430)


# SCIENCE HALL

**புதுக்குடியிருப்பு**

**2006 வர்த்தகப்பிரிவு ஆரம்பித்துள்ளது. கணக்கீடு M.S. கஜன B.BA (HONS)**

**வர்த்தகம் / பொருளியல் } சுகிர்தரூபன் B.BA (HONS)**

**ஆங்கிலம்:- தயாபரன்**

*** நேரசூசிகையை கிழமை நாட்களில் 3 மணிக்குப்பின் நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளவும்.**

(4074)

# ஜனவி சாரதி பயிற்சிப் பாடசாலை

*தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஜனவி சாரதி பயிற்சிப்பாடசாலை மீண்டும் வன்னி வாழ் மக்களுக்காக எதிர்வரும் 14. 04. 2004 இல் இருந்து தனது சேவையை வழங்கவுள்ளது. எனவே பதிவுகளுக்கு முந்துங்கள். ஏற்கனவே எம்முடன் தொடர்பு கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன்புபயிற்சி பெற்றவர்கள் தமது பதிவுகளைப் புதிப்பித்து பயிற்சிகளைத் தொடரலாம்.*

**ஜனவி லேணர்ஸ்,**
**72,சேவியர் கடைச்சந்தி,**
**கிளிநொச்சி.**

(4432)

# ஈராக்கில் அமெரிக்கப் படையினர் திணறல்

# யோர் நிறுத்த யோசனையும் நிராகரிப்பு!

## மோதல்களில் 47 படையினர், 450 ஈராக்கியர் பலி


**ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் தொடர்ச்சியான நேரடி ஆயுத தாக்குதலுக்கு முகம்கொடுத்துள்ளனர். இந்நிலையில் அமெரிக்கா தன்னிச்சையாக அறிவித்த சண்டை நிறுத்தத்தையும் தீவிரவாதிகள் நிராகரித்துள்ளனர்.**

ஈராக்கின் நஜாப் நகரம் தொடர்ந்து ஷியா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.அத்தோடு சன்னி முஸ்லிம்கள் அதிகமாகவுள்ள பலூஜா நகரில் தற்காலிக போர் நிறுத்தத்திற்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ள போதிலும் சண்டை இன்னமும் ஓயவில்லை என வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்கில் இடம்பெற்றுள்ள தாக்குதல்களில் இதுவரை 47 கூட்டணி படையினரும் 450 ஈராக்கியர் களும் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதல்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின்பவல், ஷியா மற்றும் சன்னி முஸ்லிம்களுடனான மோதல்கள் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிகமாகவே இருக்கின்றதென கூறியுள்ளார்.இந்நிலையில் ஈராக்கில் நிலவிவரும் பதற்றநிலை குறித்து கலந்தாலோசிப்பதற்காக ஸ்பெயின், போலந்து, மற்றும் எல்சல்வடோர் நாடுகளின் தலைவர்களை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டுள்ளார். இந்த நாடுகளின் படையினர் தற்போது ஈராக்கில் அமெரிக்க படையினருடன் இணைந்து பணியாற்றி வருகின்றமை தெரிந்ததே.

அமெரிக்க கூட்டணிப்படைகள் ஈராக்கை முற்றிலுமாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னர் தொடர்ச்சியாக கெரில்லாத் தாக்குதல்களுக்கு முகம்கொடுத்துவந்துள்ளன. ஆனால் தற்போது நேரடியான ஆயுத தாக்குதல்களுக்கு இந்த கூட்டணிப் படைகள் முகம்கொடுத்துள்ளதுடன் சில பகுதிகளை இழந்து மீளக்கைப் பற்ற பெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




பாக்தாத்தில் உம்குறா பள்ளிவாசலுக்கருகில் அமெரிக்க எதிர்ப்பு கோசங்களை நடத்தும் ஈராக்கியர்.



பாக்தாத்துக்குஅண்மையில் சதர் நகரில் அமெரிக்கத் துருப்புக்களோடு சண்டையிடும் மக்டடா சதர் போராளிகள் கூரைமீது நிலையெடுத்து நிற்கின்றனர்.



பாலூஜாவில் நடைபெற்ற சண்டையில் காயங்களுக்குள்ளான அமெரிக்கப் படையினருக்கு முதலுதவி அளிக்கப்படுகிறது.




ஜெர்மனுக்குச் சொந்தமானதும் அமெரிக்காவுக்காவால் கைப்பற்றப்பட்டதுமான இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தப்பட்டதுமான U505 நீர்மூழ்கி யுத்தக் கப்பல் சிக்காக்கோவில் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## பாக்தாத்தில் தாக்குதல்

பாக்தாத் மேற்குப்பகுதியில் எரிபொருளை ஏற்றிச் சென்ற வாகனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அமெரிக்கர் ஒருவரும் ஈராக்கியர் ஒருவரும் உயிரிழந்தனர். அமெரிக்கா பாதுகாப்புத் திணைக்களம் இதனை நேற்று அறிவித்தது.

# பயங்கரவாதிகள் தாக்கலாம் அல்ஜீரிய மக்கள் அச்சம்!

அல்ஜீரியாவில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தலைநகர் அல்ஜீரியர்ஸ் உட்பட பிரதான நகரங்களில் வாழும் மக்கள் பெரும் பீதியுடன் காணப்படுவதாக வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.அல்-ஹைதா அமைப் பினரே தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# படையினரை திருப்பியழைக்க முடியாது; ஜப்பான் தனது நிலைப்பாட்டில் உறுதி!

### காலக்கெடு இன்றுடன் முடிகிறது

ஜப்பானியர்கள் 03 பேரை ஈராக்கிய தீவிரவாதிகள் பயணக்கைதிகளாக வைத்துள்ள போதிலும் ஜப்பானிய வீரர்களை திருப்பியழைக்கும் நோக்கம் எமது நாட்டிற்கு இல்லை யென பிரதமர் யுனிசிரோ கொய்சுமி அறிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் ஜப்பானிய வீரர்கள் வாபஸ்பெறா விட்டால் இம் மூன்று ஜப்பானியர்களும் கொலலப்படுவார்களென தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர். தொடர்ந்து அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, டோக்கியோவிற்கு அமெரிக்க துணை சனாதிபதி டிக் சென்னி சென்றுள்ளார் ஈராக்கில் பயணக்கைதிகளாக பிடித்து வைத்துள்ள ஜப்பானியர்களின் நிலைபற்றி விவாதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிலுள்ள ஜப்பானிய படையினரை விலக்கிக் கொள்ளுமாறு கடத்தல்காரர்கள் கோரிவருவதை எதிர்த்து நிற்குமாறு ஜப்பானை அவர் வற்புறுத்தலாமென அவரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# இந்தியா எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களை காங்கிரஸ் உறுதியுடன் சமாளிக்கும்

### - தொலைநோக்கு அறிக்கையில் கருத்து

இந்தியாவுக்கெதிரான அச்சுறுத்தல்களையும் வன்முறைகளையும், காங்கிரஸ் கட்சி உறுதியுடன் எதிர்த்துச் சமாளிக்கும் என்று கட்சியின் வெளியுறவுக் கொள்கை குறித்த தொலைநோக்கு அறிக்கை உறுதிபடக் கூறியுள்ளது.

பாகிஸ்தானிலிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல்களையும், இந்தியாவுக்கெதிரான தீவிரவாத வன்முறைகளையும் மிகவும் உறுதியுடன் சமாளிக்கும் என்று காங்கிரஸ் கட்சி தமது தொலைநோக்கு அறிக்கையில் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் பாகிஸ்தானுடன் நிலையான நடைமுறை சாத்தியமான, இணக்கமான உறவு முறைக்கு இக்கட்சி அதிக கவனம்செலுத்தும் என்றும் 1972 இல் செய்துகொள்ளப்பட்ட சிம்லா உடன்பாடு, அதற்குப் பின்னரான உடன்பாடுகள் ஆகியவற்றின் கீழ் இந்த செயல்திட்டம் அமையும் என்றும் கூறப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் வெளியுறவு பிரிவுத் தலைவராகவுள்ள நட்வர்சிங் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். பாகிஸ்தானுடன் நல்லுறவுக்கு முயற்சிக்கும் அதேவேளை இந்தியா தனது பாதுகாப்பில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கும் என் றும், பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட தேசிய சனநாயகக்கூட்டணி அரசின் கொள்கைகள், முரண்பாடுகளும், குழப்பங்களும் நிறைந்த ஒரு சகாப்தம் என்று இந்த அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.



வாஷிங்டனில் 37.5 தொன் எடையுள்ள தூண்ஒன்றை ஏற்றிச்சென்ற கனரகவாகனம் ஒன்றால் மோதப்பட்ட கார் பாதையை விட்டு விலகியிருப்பதை காணலாம்.

# வைகோ மீதான குற்றச்சாட்டு பொய்த்ததால் தமிழக முதல்வர் உடன்பதவி விலகவேண்டும்

### -மறுமலர்ச்சி தி.மு.க வலியுறுத்து

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வைகோவிற்கு எதிராக வழக்கினை தொடர தகுந்த ஆதாரம் இல்லையென மத்தியபொடோ மறுஆய்வுக்குழு தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து தமிழகமுதலமைச்சர் ஜெயலலிதா தார்மீக பொறுப்பேற்று பதவியிலிருந்து விலகவேண்டுமென ம.தி.மு.க கோரியுள்ளது.

நேற்று முன்தினம் செய்தியாளர் களிடம் உரையாற்றிய ம.தி.மு.கவின் அவைத்தலைவர் கணேசன் இத னைத் தெரிவித்துள்ளார் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ் நாட்டில் அரசியல் எதிரிகளுக்கு எதிராக பொடோ சட்டம் துஷ்பிர யோகம் செய்யப் பட்டதாகவும் இதற்கு ஜெய லலிதா தார்மீக பொறுப்பேற்க வேண்டுமெனஅவர்மேலும்தெரிவித்துள்ளார்.அத்துடன் இலங்கைத்தமிழரின் பிரச்சினைக்கு வைகோ அனுதாபம் மட்டுமே காட்டினார். என கூறியுள்ளார்.

இதனிடையே பொடோ மறு ஆய்வுக் குழுவின் கோரிக்கையை பல் வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வைகோவின் வழக் கினை மேற்கொள்ள தகுந்த ஆதாரம் இல்லையென பொடோ மறு ஆய்வுக் குழு கூறியுள்ளமையைத் தொடர்ந்து தார்மீக பொறுப்பேற்று துணைப் பிரதமர் அத்வானியும் தமிழ கமு தலமைச்சர் ஜெயலலிதாவும் தமது பதவிகளில் இருந்து விலக வேண்டுமென தமிழர்தேசிய இயக்கத்தலைவர் பழநெடுமாறன் கூறி யுள்ளார்.

## பொடோ துஷ்பிரயோகத்திற்கு வைகோவின் வழக்கு உதாரணம்

### காங்கிரஸ் கட்சி விசனம்

(சென்னை)

தமிழ் நாட்டில் பொடோ சட்டம் எவ்வாறு துஷ்பிர யோகம் செய்யப்பட்டது என்பதற்கு வைகோவின் வழக்கு ஓர் உதாரணமாகுமென காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொடோ சட்டத்தை முற்றிலும் திரும்பப்பெற வேண்டுமென காங்கிரஸ்கட்சி வலியுறுத்தி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

நடைபெறவுள்ள இந்திய மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் ம.தி.மு.க கூட்டணி அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் உக்கிரமடையும் தாக்குதல்கள்

**அ. கலைவாணி**

"ஈராக் மக்கள் அமைதியுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் அதற்காகவே ஈராக் மீது போர்" என்று ஈராக் போரை தொடங்குவதற்கு காரணம் கூறியது அமெரிக்கா. அதே அமெரிக்காதான் இன்று ஈராக் மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி காட்டிக் கொண்டிருக் கின்றது.

ஈராக் மக்கள் சுதந்திரம் பெற்றுள்ளார் களா என்பதற்கு மேலாக அமைதியுடன் வாழ் கிறார்களா என்றால் அதற்கு அமெரிக்கா கூட இல்லை என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

ஏனெனில் அங்கு நாளுக்கு நாள் தாக்கு தல்கள் ஏதோ ஒரு நகரத்தில் நடத்தப்படாமல் இல்லை. உயிரிழப்புக்களுக்கும் பஞ்சமில்லை அமெரிக்க இராணுவம் அல்லது ஈராக் மக்கள் யாராவது தமது உயிர் பறிபோகும் என்று தெரி யாமலேயே செத்து மடிந்து கொண்டிருக்கிறார் கள் என்பது அங்குள்ள சாதாரண நிலைமை.

அதேநேரம் ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் மிக உக்கிரமாக தொடரப்படுகின்றன. ஈராக் போர் முடிந்தபோது மெது மெதுவாகவே தாக்குதல்கள் ஆரம்பமாகின. இன்று தாக்குதல்களின் வேகத்தை தாங்க முடியாது அமெரிக்க கூட் டுப் படை திண்டாடிக் கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி இன்று இருமுனைத் தாக்கு தல்களை அமெரிக்க கூட்டுப்படை சமாளிக்க வேண்டியுள்ளது. ஷியாமுஸ்லிம்கள் ஒரு பிரிவாகவும் ஷன்னி முஸ்லிம்கள் ஒரு



தேடுதல் நடவடிக்கை.

பிரிவாகவும் தமது தாக்குதல்களை தொடர்கின் றார்கள்.

இது அமெரிக்கா நினைத்துப் பார்க்க முடி யாத ஒரு தாக்குதலாக மாறிவிட்டது. சதாம் ஹுசைன் ஆதரவாளர்கள் மட்டுமே தாக்குதல் நடத்துவதாக இது வரை அமெரிக்கா உட்பட அனைவரும் நம்பினர்.

ஆனால் சதாம் ஹுசைன் ஆதரவாளர்கள் ஒருபுறம் தாக்குதல்களை நடத்துகின்றார்கள் தான், அதேநேரம் ஈராக்கை அன்னியர்கள் ஆளு வதை ஈராக்கியர்கள் துளியும் விரும்பவில்லை என்பதைத்தான் தற்போதைய தாக்குதல்களின் உக்கிரம் உணர்த்தி நிற்கின்றது.

ஈராக்கை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கப் போவதாக ஈராக் போர் தொடங்கிய காலம் முதல் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் பறைசாற்றி வந்தார்.

ஆனால் ஈராக் மீது தொடரப்பட்ட போரா னது முடிந்து ஒருவருடம் பூர்த்தியாகியும்விட்டது. ஈராக்கை ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பதற்கான எந்தவிதமான ஆயத்தங்களைத்தான் காண முடியவில்லை ஈராக்கியர்கள் ஈராக் போரின் ஒருவருட பூர்த்தியில் கூட ஆர்ப்பாட்டப் போராட் டம் நடத்தியுள்ளார்கள். ஈராக்கை விட்டு அமெ ரிக்க கூட்டுப்படைகள் வெளியேறவேண்டும் என் பது தான் அந்தப் போராட்டத்தில் முதன்மை வகித்தது.

ஆனால் அமெரிக்காவோ ஈராக்கில் நிலை கொண்டு விடுவதில்தான் முனைப்பு காட்டிவரு கின்றது. அங்கிருந்து அமெரிக்க கூட்டுப் படைகள் வெளியேறுவதாகவும் தெரியவில்லை, ஈராக்கை ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பதாகவும் தெரியவில்லை மறுபுறமாக ஈராக் மக்கள் அமைதி கொள்வதாகவும் தெரியவில்லை.

ஈராக்கின் பாக்தாத் நாஜாப், பலூஜா, நஸ் ரியா, ரமாதி போன்ற பல நகரங்களில் அமெ ரிக்கக் கூட்டுப்படையினர் அதிகளவில் இழப்புக் களை சந்திக்கின்றனர் தற்போது கூட இந்த நகரங்களில் இருதரப்புக்கும் ஏற்பட்ட மோதலில் 130பேர் இராணுவம் உட்பட உயிரிழந் துள்ளார்கள். சிலநகரங்களை ஷியா,ஷன்னி முஸ்லிம்கள் தம்வசப்படுத்தி விட்டதாக அமெரிக்காவும் ஒப்புக் கொண்டுள்ளது.

அதுமட்டுமன்றி சில முக் கிய நகரங்களில் பேரணியாக திரளும் மக்கள் அமெரிக்க, கூட்டுப் படையினர் மீது வெடி குண்டுகளை வீசுகின றனர்; கவச வாகனங் களைத் தீக்கிரையாக கின்றனர்; அமெரிக்க, இஸ்ரேலிய கொடி களை எரிக்கின்றனர்.

கடந்த மார்ச் மாதத்தில் அதாவது ஒரு மாத காலப்பகுதி யினுள் மட்டும் 400 ற்கும் அதிகமான அமெரிக்க இராணு வத்தினர் ஈராக்கியர் களின் தாக்குதல் களில் பலியாகியுள் ளார்கள். ஒரே நாளில் மட்டும் 30 பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப் பட்டிருக்கின்றார்கள். இந்த வகையில் நாளுக்கு நாள் தாக்குதல்கள் அதிகரித்த வண்ண முள்ளன. இவற்றை எப்படி சமாளிப்பது என் பதே அமெரிக்க சனாதிபதி ஜோர் புஷ்ஷின் முன்னுள்ள முக்கிய கேள்வியாகும்.

அது மட்டுமன்றி ஈராக்கில் இருந்து ஸ்பெ யின் இராணுவத்தை திருப்பி அழைப்பதில் முனைப்பாய் இருக்கின்றார். புதிய பிரதமர் ஸபதேரோ.

ஈராக் போரை நியாயப்படுத்திய நாடுகளுள் ஸ்பெயினும் ஒன்று. முன்னாள் ஸ்பெயின் பிரதமர் அமெ ரிக்க, பிரிட்டனுக்கு சார்பாக செயற் பட்டார். அதனால்தான் ஈராக்கிற்கு ஸ்பெயின் இராணுவத்தை அனுப்பி வைத்தார்.

ஆனால், ஸ்பெயினின் புதிய பிரதமர் ஸபதேரோ, முன் னாள்பிரதமருக்கு முரணானவர். அமெ ரிக்க, பிரிட்டனின் சொல்லிற்கு மடங் காதவர்.

அதனால்தான், ஈராக்கிலுள்ள கூட்டணிப் படைகளுக்குச் சர்வதேச அங்கீகாரம் வழங் கப்பட வேண்டும் என்று வாதம் செய்கின்றார். அல்லது தனது படைகளை திருப்பியழைக் கப்போவதாக நிபந்தனை விதித்துள்ளார்.

அது மட்டுமன்றி ஈராக்கை ஐ.நா.சபை பொறுப்பேற்க வேண்டும். ஈராக்கில் சனநாயக ஆட்சி ஏற்பட வேண்டும். அதற்கான ஆயத் தங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளார்.

இதனால், ஆடிப் போயிருப்பது அமெ ரிக்காவும் பிரிட்டனும் தான். ஈராக் போரை சரி என வாதிடுவதற்கு ஜோர்ச் புஷ்ஷையும், ரொனிப் பிளேயரை யும் தவிர வேறு யாருமே இனி வருங் காலத்தில் முன்வரப்போவதில்லை.

இதேவேளை, ஈராக்கை, ஈராக்கியரைக் கொண்ட இடைக்கால அரசிடம் கையளிக்கப் போவதாகவும், அதேநேரம் ஈராக்கில் அமெரிக் கக் கூட்டணிப் படைகள் தொடர்ந்தும் இருப்ப தற்கு ஐ.நா. சபையின் அங்கீகாரத்தைப் பெறு வதற்கான தீர்மானத்தை ஐ.நா. சபையில் கொண்டு வரவுள்ளதாகவும் ரொனிப் பிளேயர் அண்மையில் கூறியிருந்தார்.

ஈராக் மீது இப்படி கரிசனை கொள்ள என்ன காரணம்? அமெரிக்கா, பிரிட்டன் இப்படி இறங்கி வரவும் ஏதுவாக அமைவது எது?

எல்லாமே தேர்தல்தான் முக்கிய காரண மாகின்றது. எதிர்வரும் நவம்பரில் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் தேர்தலை சந்திக்க வுள்ளார். அத்துடன் மீண்டும் அமெரிக்க சனாதிபதியாக வெள்ளை மாளிகையில் குடி யிருப்பதில் அவர் மிகுந்த ஆர்வமுடையவராக இருக்கின்றார்.

அதனால்தான், பல அதிரடியான முடிவுகளை மட்டும் அமெரிக்க பிரிட்டின் கூறியுள்ளது. அவை செயற்படுத்தப்படுமா என்று நாம் கேட்கக்கூடாது. ஏனெனில், இதுவரை அமெ ரிக்காவும், பிரிட்டனும் ஈராக் விடயத்தில் பல வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளன. அதில் ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை என்பது



ஈராக்கில் தொடரும் தாக்குதல்.

வேறு விடயம்.

ஆனாலும், அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ்ஷின் புகழ் கொஞ்சமல்ல ஏராளமாக சரிந்துதான் போயுள்ளது.

ஏற்கனவே, ஐ.நா. சபையின் அனுமதியை துச்சமென மதித்து, ஈராக் மீது போர் தொடுத்த பெருமை புஷ்ஷிற்கும், ரொனிப் பிளேயருக்குமே சேரவேண்டியது.



சந்தேகத்தில் முஸ்லிம்கள் தடுத்துவைப்பு

இதனால், அமெரிக்க பிரஜைகள் புஷ்ஷின் மீது நம்பிக்கை இழந்துள்ளார்கள். ஆனால், ஈராக் போர் முடிந்து ஈராக்கில் இன்றைய எதிர்ப்பு நிலை இல்லாது இருப்பின், பயங்கரவாதத்தினை அழித்த கதாநாயகனாக புஷ் அமெரிக்க பிரஜை கள் மத்தியில் திகழ்ந்திருப்பார் புகழப்பட்டிருப்பார்.

ஆனால், இன்று ஈராக்கில் செத்துமடியும் அமெரிக்க இராணுவத்தினரோ அதிகம். அத னால், அமெரிக்க மக்களின் வெறுப்பு அமெ ரிக்க சனாதிபதி மீது அதிகரிக்குமே தவிர குறையமாட்டாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இராணுவம் [illegible]க்கப்படும்போதும், ஜோர்ச் புஷ் தனது புகழை மைனஸ் பொயின்டுக்கே இட்டுச் செல்கின்றார்.

இதேவேளை, ஈராக்கை கட்டியெழுப்புவதாக அமெரிக்கா, முன்பு கூறியது. ஒவ்வொரு நாட்டிடமும் புனரமைப்பு எனும் பெயரில் கோடி கோடியாகப் பணம் பெற்றுக் கொண்டது.

ஆனால், இதுவரை ஈராக்கின் புனரமைப்பு என்பதும் ஈராக்கை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பதும் கேள்விக்குறியாகியுள்ளன. ஏன் பொய்த்துப்போய்விட்டது என்றே கூறவேண்டும். ஈராக்கை மீண்டும் அமெரிக்கா கட்டி யெழுப்பும், ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கும் என்பதனால் மட்டுமே அமெரிக்காவின் தலைமை யிலான நிர்வாகத்தை ஈராக்கியர்கள் ஓரளவு ஜீரணித்திருப்பார்கள் எனலாம்.

ஆனால், அமெரிக்காவோ ஈராக்கில் நிரந்தர மாக முகாமிட்டுள்ளது என்பதைப் புரிந்து கொண்டதனாலேயே இன்றைய தாக்குதல்கள் மிக மோசமாக உள்ளது.

இதனால், ஈராக்கை விட்டு அமெரிக்கா தாமாக வெளியேறுமா என்பது சந்தேகமே. ஆனால், ஒன்று மட்டும் செய்யும். ஈராக் மீது கண் மூடித்த னமான தாக்கு தல்களை தொ[illegible] முடியும்.

ஏற்கனவே அமெரிக்காவின் கோபம் அதிகரித்துள்ளது என்பதை தான் அண்மையில் பலூஜா நகர மசூதி மீது தாக்குதல் நடத்தியமை வெளிக்காட்டியுள்ளது. இதில் அப் பாவி பொதுமக்கள் 40ற்கும் மேற்பட் டோர் உயிரிழந்துள்ளார்கள்.

எனவே, ஈராக்கியர்களின் தாக்கு தல்கள் அதிகரிக்கும் என்பதில் சந்தே கமே இல்லை. அதேவேளை, அமெ ரிக்காவின் உக்கிரமான தாக்குதல் களும் தொடராது இருக்கமாட்டது.

ஆக, மொத்தம் இரு தரப்பிற்கும் இடையில் அதிகமாக இழப்புக்களை யும், சொத்துக்களையும், வீடு வாசல் களையும் இழக்கப்போவது ஈராக்கிய பொதுமக்கள்தான்.

எனவே, இதனை மாற்றியமைக்கப்போவது யார்? அமெரிக்கா ஈராக்கைவிட்டு வெளியேறும்வரை தாக்குதல்கள் தடைப்படப்போவதில்லை. ஆனால், அமெரிக்காவும் எண்ணெய் வளத்தை சுரண்டி எடுக்காது வெளியேறும் என்று நம்ப முடியாது.

எனவே, ஈராக்கிய மக்களின் நாளாந்த இழப் புக்களை ஈடுகட்டப்போவது யார்? ஈராக் மக்கள் அமைதி கொள்வது எப்போது? இவை தான் இன்று உலகை கௌவிக்கொண்டிருக்கும்வினாக்களாகவுள்ளன.

---

## மத்திய மாகாண சபை 27 ஆம் திகதியுடன் கலைப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபை எதிர்வரும் 27 ஆம் திகதி கலைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் உள்ள மத்திய மாகாண சபையின் ஆயுட் காலம் முடிவடைகிறது. இந்த நிலையில் மீண்டும் மத்திய மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறுமானால் அதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றி பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஊவா, சப்பிரகமுவ, வடமத்திய, வடமேல் மாகாண சபைகள் பொதுசன ஐக் கிய முன்னணியின் ஆட்சியின் கீழ் இயங்கி வருகின்றன. (32)

## கோரிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் இடம் பெற்று வரும் வன் முறைகள் உடனடியாக நிறுத் தப்பட வேண்டும் என சிறிலங்கா சனாதிபதியால் நியமிக்கப்பட்ட குற்றத்தடுப்பு ஆலோசனை சபை கேட்டுள்ளது.

அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிலாளர் சங்கத் தலைவர்கள் மற்றும் பொலிஸ் துறையினர் தமது வேண்டு கோள்‌ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என அந்தச்சபை கேட டுள்ளது. (33)

## இரு ஆங்கில ஆசிரியர்களுடன் இயங்கும் மடு கல்விவலயம்!

மடு கல்வி வலயத்தில் 36 பாடசாலைகள் மட்டுமே இயங்குகின்றன. ரணகோச நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்த நிலையில் இயங்கும் இப்பாடசாலைகளில் 7000 மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றனர். இவ்வலயத்தில் இரண்டு ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். இந்த பாடரீதியான ஆசிரியர் பற்றாகுறையாக உள்ளது.

மேலும் இவ்வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் 41ல் ஐந்து பாடசாலைகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளதால் இயங்க முடியாத நிலையில் உள்ளன. (5)

# பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில்

# ஐ.ம.சு.மு. அரசுக்கு ஹெல உறுமய ஆதரவு!

## வடக்கு-கிழக்கை பிரிக்கவும் நிர்ப்பந்தம்

(கொழும்பு)

**தமது கட்சி முன்வைக்கும் பல்வேறு கோரிக்கைகளைச் சந்திரிகாவின் ஐ.ம.சு.மு. அரசு நிறைவேற்றுவதாக உறுதியளிக்கும் பட்சத்திலேயே அவ்வரசுக்கு ஆதரவு அளிக்க ஜாதிக ஹெல உறுமய முன்வரும் என அக்கட்சி தெரிவித்துள்ளது.**

கடந்த வியாழன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து உரையாடியபோதே அக்கட்சி மேற்படி நிபந்தனையை விதித் துள்ளது.

சுமார் ஒன்றரை மணித்தியாலமாக நடைபெற்ற இப்பேச்சுக்களின்போது முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கரம நாயக்கவை சபாநாயராக நியமிக்க ஆதரவு வழங்குமாறும், வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு ஆதரவு வழங்குமாறும் சந்திரிகா கேட்டிருந்தார்.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமய தமது கோரிக்கையில், வடக்கு-கிழக்கு மாகாணங்களை பிரித்தல், ஒரே நாடு என்பதை அங்கீகரித்தல், விடுதலைப்புலிகள் மட்டுமே தமிழரின் ஏக பிரதிநிதி என்பதை நிராகரித்தல், பௌத்தர்கள் மதம் மாறும் தடைச் சட்டத்தை மீண்டும் கொண்டுவருதல், அரசியலமைப்புச் சட்டத்தின்படி கொண்டுவரப்பட்ட பொலிஸ் ஆணைக் குழுவைப் பலப்படுத்தல், சுயாதீனத் தேர்தல் குழு, ஊடக ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியவற்றைப் பலப்படுத்துதல் என்பன போன்ற கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.

மற்றும் கடந்த காலங்களில் பிக்குமார்களுக்கெதிராகவும், கட்சிக்கெதிராகவும், ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் பற்றியும் சனாதிபதியிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

மேலும் பல பேச்சுக்களை நடத்துவது எனவும் வரும் 22ஆம் திகதிக்கு முன்பு இவை பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

## உதவி தேவை!

மன்னார் கட்டையடம்பன், பள்ளமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 125 குடும்பங்கள் மடு, தச்சனா மருதமடு, பேசாலை ஆகியஇடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். கடந்த சனவரி முதல் 15 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். இப் பகுதி மக்களுக்கு எவ்வித கொடுப்பனவு உதவிகளும் வழங்கப்படவில்லை இதனால் மக்கள் பலவித இனனல்களுக்குள்ளாகியுள்ளனர்.

## ஒரு கோடி பெறுமதியான மாணிக்க கற்கள் திருட்டு

பொகவந்தலாவை பிரதேசத்தில் வசிக்கும் மாணிக்கக்கல் வியாபாரி ஒருவரின் வீட்டை உடைத்து வீட்டினுள் இருந்த சுமார் ஒரு கோடி ரூபா பெறு மதியான மாணிக்கக் கற்களை திருடிய நபரை பொகவந்தலாவைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

மாணிக்கக்கல் வியாபாரியின் வீட்டை நிருமாணிப்பதில் ஈடுபட்ட பணியாளர் ஒருவரே இத்திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார். மாணிக்கக் கற்களைத் திருடிய நபர் ஐந்து நாட்களாக தலைமறைவாக இருந்த போதும் அவரை கேகாலை பிரதேசத்தில் பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

# அனுசரணையாளர் நிலைக்கு அப்பால் நோர்வேயை செயற்பட அனுமதியோம்

## லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகின்றார்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே தொடர்ந்தும் அனுசரணையாளராகவே செயற்பட முடியும் அதற்கப்பால் மத்தியாஸ்தராகவோ அல்லது நடுத்தீர்ப்பாளராகவோ அல்லது அதற்கும் மேல் அதிகாரமுள்ளவராகவோ செயற்பட அனுமதிக்கப்படமாட்டாது என்று சனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிநாட்டமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபம் சென்னை புதன்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்திய கதிர்காமர், இச்சந்திப்பின் பின் செய்தியாளர்களிடமே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இலங்கையின் எதிர்காலம் குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் போது முக்கிய காரணியாக இருப்பது இந்தியாதான் என வலியுறுத்தியதுடன் எதிர்காலத்தில் இந்தியா இலங்கையுடன் மேலும் நெருக்கமாகச் செற்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியக் கூட்டு இராணுவ' ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

இந்தியாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிக் கொள்வதில் எமது அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. ஆர்வமாய் இருக்கின்றது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நாலரை மணி நேரத்திற்கு ஒருவர் வாகன விபத்துக்களால் மரணம்

இலங்கையில் தினமும் இடம் பெறுகின்ற வாகன விபத்துக்களால் ஒவ்வொருநாலரை மணிநேரத்திற்கும் ஒருவர் மரணமடைகின்றார்.இதனை சுகாதார போசாக்கு நலன்புரித்துறை அமைச்சின் செயலாளர் ரெஜிபெரேரா தெரிவித்துள்ளார். இந்த நாட்டில் பொது சுகாதாரப் பிரச்சினையாக வாகன விபத்துக்கள் மாறியுள்ளன. இதனைக் கட்டுப்படுத்தவோ அதனால் நேருகின்ற மரணங்களையும் காயங்களையும் குறைக்கவோ எந்தவொரு அரசியல் கட்சியும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கான யோசனைகளைக் கூடத்தமதுதேர்தல் விஞ்ஞாபனங்களில் முன்வைக்கவில்லை. வாகன விபத்துக்களால் வருடாந்தம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மரணமடைகின்றார்கள் அத்துடன் காயப்பட்டு போகின்றார்கள் இதனைப்பற்றியாருமே பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## வங்கி.புகையிரத சேவையை தனியார் மயமாக்கல் நிறுத்தம்

அரசவங்கி புகையிரத சேவைகளை தனியார் மயமாக்கும் திட்டத்தை உடன்நிறுவித்துவது என்று புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறி யுள்ளார்.

இதேவேளை விவசாயம் மீன்பிடி, உள்ளூர்,கால்நடை உற்பத்தி, கிராமிய அபிவிருத்தி என்பற்றினூடாக நாட்டைக் கட்டியெழுப்பவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# கடற்கரை யோரரோந்து யாழ்.இல் கடற்படையினர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டின் கரையோரப் பிரதேசங்கள் எங்கிலும் படையினர் தமது ரோந்து பாதுகாப்பு நடவடிக்கையினை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில நாட்களாக கடற்படையினர் இந்நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக கடற்றொழிலாளர் கள் தெரிவிக்கின்றனர்.

திடீரென ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நடவடிக்கைகளின் போது கடல் பரப்புகளில் படையினர் தமது விசைப் படகு ரோந்துகளையும் கண்காணிப்புகளையும் ஆரம்பித்திருப்பதுடன் கடற்கரைஓரங்களில் விசேட ரோந்துகள் மற்றும் காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் கடற்தொழிலாளர்கள் மீதான சோதனைகள் மற்றும் கெடுபிடிகளையும் ஆரம்பித்துள்ளனர். இதனால் குடாநாட்டின் கரையோரப் பிரதேச வாழ்மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (33)

## குடிநீர் விநியோகத்திற்கு அரச அதிபரிடம் பணமில்லை!

யாழ். குடாநாட்டில் தற்பொழுது நிலவிவரும் கடும் வரட்சிகாரணமாக பல பகுதிகளிலும் குடிநீருக்குப் பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது. வடமராட்சி, தென்மராட்சிமற்றும் தீவகப்பிரதேசதங்களில் அண்மைக் காலமாக நிலவிவரும் இக்குடிநீர் தட்டுப்பாட்டு நிலைமைகாரணமாக அப்பகுதிமக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனைத் தீர்த்து வைக்கும் முகமாக பவுசர்கள் மற்றும் குழாய்கள் மூலமான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு நிதிப்பற்றாக்குறை காணப்படுவதாக யாழ்.அரச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் இப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலையில் பல தொற்று நோய்களுக்கும் இலக்காகக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. (33)

# 200 லட்சம் ரூபாய் வெளிநாட்டு பணத்தாள்களை கடத்தியவர் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு நாணய தாள்களை கடத்த முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டு நாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரின் பயணப் பொதியில் இருந்து இருநூறு லட்சம்ரூபாவுக்கு பெறுமதியான வெளிநாட்டு நாணய தாள்கள் இருந்ததாக விமானநிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு நாணய தாள்களில் ஸ்ரேலிங் பவுண்களும், யூரோ நாணய தாள்களும் இருந்ததாக கட்டுநாயக்கா விமானநிலைய சுங்க அதிகாரிகள் கூறுகின்றனர் இந்த நாணயத் தாள்களுடன் கைது செய்யப்பட்ட நபர் சிங்கப்பூர் நோக்கி செல்லவிருந்தாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதல்கட்ட விசாரணைகளின் பின்னர் கைதுசெய்யப்பட்டவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## விடத்தல்தீவில் குடிநீருக்கு தட்டுப்பாடு 1-பரல் தண்ணீர் 75 ரூபாவிற்கு விற்பனை!

மன்னார் விடத்தல்தீவு மக்கள் குடிநீருக்கு பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்

இப்பகுதி மக்கள் ரணகோச இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து மீளகுடியமர்ந்த நிலையிலேயே இச்சிரமத்திற்குள்ளாகுகின்றனர் தற்போது மாந்தை உதவி அரச அதிபர் பிரிவினரின் பவுசர் ஒன்றின் மூலம் குறைந்தளவு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

விநியோகிக்கப்படும் 1குடம் நீர் இரண்டு ரூபாவுக்கு விநியோகிக்கப்படுகின்றது வண்டில் மூலம் கொண்டு செல்லும் ஒருபரல் நீர் எழுபத்தைந்து (75/=) ரூபா வுக்கு விநியோகிக்கப்படுகின்றது .இங்கு 600 குடும்பங்கள் உள்ளன. இம்மக் கள் நீர் எடுக்க செல்வதானல் நான்கு கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது .(05)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப் பட்டறை

(செட்டிகுளம்)

வவுனியா வடக்கு பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி மாணவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் முகமாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது. மூன்று நாட்களுக்கு நடைபெறும் பயிற்சிப் பட்டறை கனகராயன்குளம் பகுதியில் நடைபெறவுள்ளது.

19 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 35 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் இதன் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களின் உளம் சார்ந்த அறிவினை அதிகரிப்பதுடன் மாணவர்களின் பெற்றோர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து பிள்ளைகளின் உளம் சார் முக்கியத்துவத்தினை பற்றி விழிப்புணர்வு வழங்கப்பட இருப்பதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியாகிளையினர் தெரிவித்துள்ளனர். இந்தப் பயிற்சிப் பட்டறை 16,17,18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.(21)

# வடலியடைப்பில் மீள்குடியமர படைத்தரப்பினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடலியடைப்பு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமை அகற்றி அப்பகுதி மக்களை மீளக்குடியமர்வதற்கு படையினர்அனுமதித்துள்ளனர்.

1995ஆம்ஆண்டு காலப்பகுதிகளில் இருந்து இப்பகுதியில் படையின் பிரமாண்டமான இராணுவமுகாம் ஒன்றை அமைத்து அதில் தங்கியிருந்தனர் இதனால் 20ற்கு மேற்பட்ட வீடுகள் பாவிக்கமுடியாதநிலையில் முடக்கிவைக்கப்பட்டிருந்ததுடன் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதியினை சூழ இயல்புநிலை பாதிக்கப்பட்டு மக்கள் பல அசௌகரியங்களை அனுபவித்து வந்தனர்.இதனை ஆட்சேபித்து இப்பகுதி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் போராட்டங்களை• நடத்தி வந்தது தெரிந்ததே. (33)

## டொல்பின் வாகன கடத்தல் வவுனியாவில் முறியடிப்பு

(செட்டிகுளம்)

வவுனியாவில் இருந்து கடத்தப்படவிருந்த டொல்பின் வாகனம் ஒன்றினை வவுனியா பொலிசார் கைப்பற்றி இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். இந்த வாகனத்தின் அடிச்சட்ட இலக்கம், இயந்திர இலக்கம் என்பனவும் மாற்றப்பட்டு இருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு முன்னரும் பல வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளமையும், கடத்தப்படவிருந்த போது பொலிசாரல் கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் கடத்தப்படும் வாகனங்களும் மோட்டார் வண்டிகளும் பிற மாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுவதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

# வல்லையில் சிறிலங்காப் படையினர் பிரயாணிகள் மீது திடீர் சோதனை

யாழ். வல்லை வெளிப் பாலப் பகுதியில் நிலை கொண்டுள்ளபடையினர் வீதியால் செல்வோரை திடீரென வழிமறித்துச் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.நாடாளுமன்ற பொதுத் தேர்தல் காலத்தைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கைகளின் போது வீதியால் செல்லும் வாகனங்கள் படையினரால் திடீரென வழிமறித்துச் சோதனை செய்யப்படுவதுடன்,மக்கள் மீதும் உடற்பரிசோதனை,அடையாள அட்டைச்சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். படையினரின் இத்திடீர் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் பீதியையும் விசனத்தையும் உருவாக்கியுள்ளது. (33)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

11~04~2004



## டதுர்சிகா(ஐது)

கிளிநொச்சிஇரணைமடு கனகாம்பிகை அம்மன் கோவில் அருகாமையில் வசிக்கும் திரு திருமதி ரவிசங்கர் தம்பதிகளின் செல்வப் புதல்வி டதுர்சிகா (ஐது) தனது முதலாவது பிறந்தநாளை இல-196F/3 கனகாம்பிகை அம்மன் கோவில் அருகாமையில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா,அம்மா,அப்பப்பா,அப்பம்மா,அம்மப்பா,அம்மம்மா,பூட்டி, தாத்தா,பெரியப்பாமார்,பெரியம்மாமார்,சித்தப்பாமார்,சித்திமார்,மாமாமார், மாமிமார், அண்ணாமார்,அக்காமார்,தம்பிமார்,தங்கைமார், மச்சாள் மார்,மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் திருவருள் மிகு ஸ்ரீகனகாம்பிகை அம்மன் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-
மதியழகன்(மாமா)
ராதினி(மாமி)
விது(மச்சாள்)
சது(மச்சான்)
ஜேர்மன்.

வீக்கி (சித்தப்பா)
ராஜி (சித்தி)
பவன (சித்தப்பா)
லண்டன்.

(4428)

# நினைவுநாள் நிகழ்வு



கடற்புலி

## உம் லெப். குவேத

### அருளம்பலம் அஜீவா

கோண்டாவில் - யாழ்.

தோற்றம்:-10-10-1979

வீரச்சாவு:-11-04-1997

"வீரத்தின் விளைநிலமே
விடுதலையின் வீரமே
தாயகத்தின் உயிர்ப்புக்காய்
தளராது களமாடியவளே
என்றும் உன் நினைவுகள்
எம் மனங்களில் வாழும்."

இந்நாளில் நினைவு கூரும்
அண்ணன் பிறின்ஸ்.

(4425)

# 02ம், 11ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்

10-04-1945

25-04-1977



பொன்னம்பலம் உலகநாதன்

மறைவு
11-04-2002

2ம் லெப். தண்மதி
(உலகநாதன் சிவாஜினி)

வீரச்சாவு
11-11-1993

மருதங்கேணி.

பண்பையும் பாசத்தையும் மெக்கனித்த உறவுகளோ-உம்பிரிவால்
நாம்கதறியழுவது காதில் கேட்கலையோ- இரண்டல்ல
பதினொன்றல்ல ஆயிரம் ஆண்டு சென்றாலும் ஆறிடா உம் நினைவு.

11.04.2004 அன்று இவர்களின் இல்லத்தில் நடைபெறும் நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

தகவல்:- உ.கேமா
புதுக்குடியிருப்பு.

(4071)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக்கிளை
அலகுப் பொதுக் கூட்டங்கள் தொடர்பான

# அறிவித்தல்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய யாப்பின் பிரகாரம் பிரிவுகள் ரீதியாக அலகுகளை அமைப்பதற்கான பொதுக்கூட்டங்கள் எதிர்வரும் 17.04.2004 சனிக்கிழமை 18.04.2004 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களும் கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரிவுகளிலும் 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப் பிரிவிலும் நடைபெறவுள்ளன. கூட்டம் நடைபெறும் இடங்கள், நேரம் என்பன சம்பந்தப்பட்ட பிரிவுகள் மூலம் சகல ஆயுட்கால, தொழிற்படும் உதவும் அங்கத்தவர்களுக்கும் அறிவிக்கப்படும். எனவே அறிவிக்கப்படும் அலகுகளுக்குரிய சகல அங்கத்தவர்களும் இக்கூட்டங்களில் தவறாது பங்குகொண்டு அலகுகள் அமைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

"நன்றி"

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டக் கிளை,
கிளிநொச்சி.

க. கணேஸ்
கௌரவ செயலாளர்.

(9441)


மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# தமிழீழ வைப்பகத்தின்

## வியத்தகு வெகுமதிகள்

அமுதம் சிறார் சேமிப்பு கணக்கில் 14.04.2004 ஆம் நாளில் உரூபா 10,000/= இற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்யும் சிறார்களுக்கு.



- வைப்புத் தொகையின் 10% உபகாரப்பணம் (BONUS)
- மேலும் பெறுமதிமிக்க விருப்பத் தெரிவுப் பரிசுப்பொதிகள்






தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(9361)



**சிந்தனைக்கு**

விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம்; நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-04-2004

## இந்தியாவின் பங்கேற்பு!

"இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா இனி நேரடியாகப் பங்கேற்கும்" எனச் சிறிலங்கா அரசின் புதிய வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளமை புதிய அரசாங்கத்தின் உணர்வுகளுக்கு வடிகால் தேடுவது போன்றதொன்றாகும்.

ஐ.ம.சு. முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றதில் இருந்தே இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இந்தியாவின் நேரடித் தலையீட்டை கோருவதில் தீவிரம் காட்டி வந்துள்ளது. புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மகிந்தராஜபக்சவும் இதில் தீவிர அக்கறையை வெளிக்காட்டுபவராகவே உள்ளார்.

புதிய ஆட்சியாளர்கள் இத்தகைய அக்கறையை வெளிக்காட்டி வருகின்றபோதும் இந்தியா அரசிடம் இருந்து உத்தியோகபூர்வமான அறிக்கை எதுவும் இதுவரை வெளிவந்ததாக இல்லை. ஆனால், இலங்கை ஆட்சி மாற்றம் தொடர்பாக இந்தியா தீவிர அக்கறை கொண்டுள்ளது என்பது வெளிப்படையாக அவதானிக்கத்தக்கதொன்று.

எடுத்துக் காட்டாக, புதிய பிரதமராக மகிந்தராஜபக்ச பதவி ஏற்றதும் முதலில் அவரைச் சந்தித்துப் பேசிய வெளிநாட்டு இராஜதந்திரி இந்தியத் தூதுவர் நிருபம் சென் அவர்களே ஆகும். அது மாத்திரமல்ல, இந்தியத் தூதுவர் நிருபம் சென் வெளிவிவாகர அமைச்சராக நியமனம் பெற்றுள்ள லக்ஷ்மன் கதிர்காதிர்கமரையும் அவரது வீடுவரை சென்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதேவேளை இந்தியத் தூதுவர் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐ.ம.சு.முன்னணியைப் பலப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்வதாகவும் தகவல்கள் கூறுகின்றன. குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி மீது அழுத்தங்களைப் பிரயோகித்தாகவும் சனாதிபதி சந்திரிகாவின் ஐ.ம.சு.முன்னணியை ஆதரிக்குமாறு கோரிக்கை விடுத்ததாகவும் உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.ம.சு.முன்னணி இந்தியாவின் வரவில் அக்கறை கொள்வது எதற்காக என்பது அனைவருக்கும் தெரிந்த தொன்றே. இதில் முதலாவது விடுதலைப்புலிகளுடன் இந்தியா கொண்டுள்ள பகையுணர்வு என்பதாகும். சிறிலங்காவிற்கு ஆதரவானதொரு சூழ்நிலையை உருவாக்கும். இரண்டாவதாக இனப்பிரச்சினைக்கான அதிகுறைந்தபட்சத் தீர்வுத்திட்ட யோசனைகளை ஏற்கக் கூடிய ஒரே நாடாகவும் இந்தியாவே உள்ளதென்பது.

இதனைவிட இந்தியா அண்டைநாடு, அயல்நாடு என்ற ரீதியிலோ இந்தியா இப்பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தி என்பதினாலோ அவர்கள் இந்தியாவின் வரவை எதிர்நோக்கியிருக்கவில்லை. இந்திய அரசு மீது வசை மாரி பொழிந்தவர்களும் இந்திய சிறிலங்கா சமாதான நடவடிக்கைகளுக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக வன்முறையில் இறங்கியவர்களும் இவர்களேயாகும்.

குறிப்பாக முதலாவது மாகாணசபைத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில்இறங்கியவர்களும், தேர்தலைப் பகிஸ்கரித்தவர்களும் இவர்களாகும். அத்தோடு இந்திய இராணுவத்தை நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரி வன்முறையில் இறங்கியவர்களும் இவர்களேயாகும். இத்தகையவர்களே இந்தியாவிற்கு இன்று அமோக வரவேற்பு அளிக்க முன்வந்தவர்களாகும். இவர்கள் இந்தியாவிற்கு ஆதரவை வெளிப்படுத்துவதானது இந்தியாவின் மீதுள்ள நன்றி விசுவாசத்தினாலோ அன்றி நல்லெண்ணத்தினாலோ அல்ல. இந்தியாவைத் தமது தேவைக்காகப் பயன்படுத்திக்கொள்வதற்காகவேயாகும். அதாவது முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியா சிறிலங்கா சமாதான உடன்பாட்டை தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டது போன்றதேயாகும்.

இதேவேளை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிடுவது என்பது எவராலும் நிராகரிக்கப்பட்ட தொன்றல்ல. ஆனால் இந்தியா இலங்கைப் பிரச்சினைகளில் தலையிடுவதாக இருந்தால் அது நியாயமான நிலைப்பாடுகளை முன்வைப்பதாக இருத்தல் வேண்டும். தனது அதிகாரவரம்பிற்குள் நின்றுகொண்டோ, சிறிலங்கா அரசின் நிலைப்பாட்டிற்கு நியாயம் கற்பிப்பதாகவோ, விடுதலைப்புலிகளுடனான கடந்தகால கசப்பான அனுபவங்களைக் கொண்டதாகவோ தீர்மானம் இருப்பின் அது வரவேற்கத்தக்கதாக இருக்க மாட்டாது. அதாவது நடுநிலையான-நீதியான தீர்வொன்றுடன் இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடுமானால் அதற்கான எதிர்ப்பு தமிழர்கள் தரப்பிலிருந்து எழவாய்ப்பில்லை. மாறாக சிங்களத்தரப்பிலிருந்து எதிர்ப்புக் கிளம்பக்கூடும்.

# பொதுத் தேர்தலில் தோல்வியுற்றவர்களுக்கு உயர் பதவிகளில் இடமளிக்கக் கூடாது

## - ஜே.வி.பி. சனாதிபதிக்கு அறிவுரை

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற எவருக்கும் திணைக்களங்களின் தலைவர் பதவிகளோ அல்லது வேறு முக்கிய பதவிகளோ வழங்கப்படக் கூடாது தென்று ஜே.வி.பி.யின் அரசியல் பீடம் சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிற்கு அறிவுறுத்தியுள்ளது.

அரசதிணைக்களங்களிலும் மற்றும் ஏனைய நிறுவனங்களிலும் தலைவர்களை நியமிக்கும் போது திறமைகளின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படவேண்டும். திறமை யில்லாத ஒருவருக்கும் பதவிகள்வழங்கப்படக் கூடாதென்றும் ஜே.வி.பி. சனாதிபதியிடம் கோரியுள்ளது.

கடந்த காலங்களில் தேர்தல்களில் தோல்வியுற்ற வேட்பாளர்களுக்கு திணைக்களங்களின் தலைமைப் பதவிகளும் ஆலோசகர் பதவிகளும் வழங்கப்பட்டுவந்தன.

அரசியல் ரீதியாக வெற்றிடங்கள் நிரப்பட்டதால் கடந்த காலங்களில் பல்வேறு அரச நிறுவனங்களின் அபிவிருத்திகள் பின்னடைவை கண்டன.

இதனால் பெரும்பாலான அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க வேண்டிய சூழ்நிலை உருவானதென்றும் ஜே.வி.பி.யின் அரசியல் பீடம் சனாதிபதிக்குச்சுட்டிக் காட்டியுள்ளது.

# ஐ.ம.சு.முன்னணிபொதுத்தேர்தலில் பாரிய வெற்றியைப் பெற்றதாக ஏற்க முடியாது

## - முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண

கடந்த பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாரிய வெற்றியை பெற்றதாக கூறப்படும் செய்தியை ஏற்றுக் கொள்ள முடியாது என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார். இலங்கையின் வரலாற்றில் ஐக்கிய தேசிய கட்சியே பாரிய வெற்றியை பெற்றுள்ளது. 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தேசிய முன்னணியை ஐக்கிய தேசிய கட்சி 13 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்த இதுவே வரலாற்றில் பாரிய தேர்தல் வெற்றியாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 35 இலட்சம் வாக்குகளை பெற்றது எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பொது சன ஐக்கிய முன்னணியால் 28 இலட்சம் வாக்குகளை மாத்திரமே பெற முடிந்தது மக்கள் விடுதலை முன்னணியே எஞ்சிய 14 இலட்சம் வாக்குகளை பெற்றதாகவும் ராஜித சேனாரட்ண குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இந்திய மக்கள் சுதந்திர முன்னணி தமது பெரும்பான்மையை எதிர்வரும் 22ம் திகதி சபாநாயகர் தெரிவின் போது காட்ட வேண்டும் எனவும் அவர் சாவல் விடுத்துள்ளார்.

# ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்தி முடிக்க ஆலோசனை

(கொழும்பு)

வெவ்வேறு தினங்களில் பதவிக்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது குறித்து தேர்தல் திணைக்களம் பரிசீலித்து வருவதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் கே. சேனாநாயக்க கூறியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்களில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் பிரதான இலக்கைக் கருத்தில் கொண்டே இந்தவிடயம் பரிசீலிக்கப்படுவதாக கே. சேனாநாயக்க மேலும் கூறியுள்ளார்.

இதன்படி ஊவா, மத்தி, சப்பிரகமுவ, வடமத்திய மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தலே ஒரே தினத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாண சபைத் தேர்தலின் பின்னர் ஜூலை மாதமளவில இந்த 5 மாகாண சபைகளுக்குமான தேர்தல் இடம்பெறக்கூடும் என்று தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஊவா மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான பதவிக் காலம் ஏப்ரல் 26ஆம் திகதியும், சப்பிரகமுவ மாகாண சபையின் பதவிக்காலம் மே 4 ஆம் திகதியும், மேல் மாகாண சபையின் பதவிக்காலம் மே 5ஆம் திகதியும், வடமத்திய மாகாண சபையின் பதவிக் காலம் மே 6 ஆம் திகதியும் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.ம.சு. முன்னணியின் தேசியப்பட்டியலில் ரத்வத்த ,ஆனந்தசங்கரிக்கு இடமளிக்க முடிவு!

## -திரைமறைவில் நடவடிக்கையாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 13 தேசியப் பட்டியல் ஆசனங்களுக்கான பிரதிநிதிகளின் பெயர் விபரங்களை, அக்கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜெந்த் ஆணையாளரிடம் கையளித்துள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமர், விஸ்வா வர்ணபாலா, டி.ஈ.டபியூ. குணசேகர, ரிஷ் விதாரண, கீதாஞ்சனா, குணவர்த்தன செகுஇசாடின், அன்வர் இஸ்மாயில், ராமலிங்கம், சந்திர சேகரன், ஜனதாச பீரிஸ், இடி.சி.வீரசேகர, குமாரசிங்க லியனகே, எச்.எம். வசந்த சமரசிங்க, ஜே.ஏ.மேரி லுசிடா ஆகியோரோ இவ்வாறு யேசி ஆசனங்களுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்

இதற்கிடையில், சனாதிபதி மாளிகையில் இருந்து கசிந்துள்ள இரகசிய தகவல்களின் படி இந்த 13 பேரில் மூவர், ஏப்ரல் 22ம் திகதிக்கு முன்னதாக தாங்களாகவே ராஜினாமா செய்வார்கள் என்றும், அந்த இடங்களுக்கு முன்னாள் பிரதம மந்திரி ரத்னசிறி விக்கிரம நாயக்க, முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த உட்பட இன்னுமொருவர் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது. மூன்றாவதாக நியமிக்கப்படவுள்ளவர் ஆனந்தசங்கரியாக இருக்கலாம் என்றும் செய்திகள் கசிந்துள்ளன.

வழங்கப்படுகின்ற பட்டியலில் இவர்களைச் சேர்க்குமிடத்து ஜே.வி.பி.யிலிருந்து சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களிடமிருந்தும் சிங்கள மக்களிடம் இருந்தும் எதிர்ப்பு கிளம்பலாம் என்று எதிர்பார்க்கும் சந்திரிகா, இரகசிய ஒழுங்கின்படி, இப்போது அறிவிக்கப்பட்டவர்களில் மூவர் பதவி விலகுவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டு விட்டதாக இணையதள செய்திகள் தெரிவிக்கின்றன.

# நாளை இந்தியா-பாகிஸ்தான் இறுதிப் போட்டி இருதரப்பிலும் அணிகள் சீரமைப்பு

நாளைய மறுதினம் ராவல் பிண்டியில் நடைபெறவுள்ள 3வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானின் 3வீரர்கள் பங்குபற்றவில்லை என அறிவிக்கப்படுகிறது.

அவ்வணியின் விக்கெட்காப்பாளர் மொயின்கான், சகலதுறை ஆட்டக்காரர் அப்துல்ராசாக் மற்றம் 2வது போட்டியின் ஆட்டநாயகனான உமர்குல் ஆகியோரே காயம் காரணமாக அணியில் இடம்பெறவில்லையென கூறப்படுகிறது.

இதேவேளை இப்போட்டியில் இந்திய அணியில் கங்குலி பங்குபற்றுவது உறுதியான நிலையில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஆணஷ்சோப்ரா இடம்பெறுவது சந்தேகமாயுள்ளது இவர் நீக்கப்படும் பட்சத்தில் ஆரம்பத்துடுப்பாட்ட வீராக யுவராஜ்சிங் களமிறங்குவார்.மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகளை பெற்றுள்ளமை தேரிந்ததே.

## முரளியின் சர்ச்சைக்கு முடிவு

கிரிக்கெட் விதிகளுக்கு முரணாக பந்தை வீசி எறிகின்றார் எனும் குற்றச் சாட்டிலிருந்து சிறிலங்காவின் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முரளிதரனின் பந்துவீச்சு சர்ச்சைக்குரியது அல்ல என்றும், விதிகளுக்கு உட்பட்டே அவர் பந்தை வீசுவதாகவும் அவுஸ்திரேலியா நிபுணர் குழு கூறியுள்ளது. மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் மனித நகர்வுகள் தொடர்பான ஆய்வுத்திணைக்களத்தில் உயர் தொழில்நுட்ப புகைப்படக்கருவிகளின் துணையுடன் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையின் இறுதி முடிவிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வுத் திணைக்களம் தமது அறிக்கையை சிறிலங்கா கிரிக்கெட்சபைக்கும்,சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கும் எதிவரும் செவ்வாய்க்கிழமை அனுப்பி வைக்கவுள்ளதாகவும் கூறியுள்ளது.

# மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கு ஜே.வி.பி.-மைத்திரிபாலபோட்டி

## - பதவியேற்பு இழுபறிக்கு இதுவே காரணம்

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அமைச்சுப் பதவியை யார் பெறுவது என்ற கருத்துமுரண்பாடே நேற்றைய அமச்சரவை சத்தியப்பிரமாணம் இழுபறி நிலையை அடையக்காரணம் எனத் தெரிவிககப்படுகிறது.

ஏற்கனவே விவசாய மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சுப் பதவியை மக்கள் விடுதலை முன்னணி கோரியிருந்த நிலையில் நேற்று அமைச்சுக்களை பொறுப்பேற்பதற்காக கூடியபோது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேன மகாவலி அபிவிருத்தி அமைச்சை தனக்கு வழங்குமாறு கோரியதை அடுத்து நேற்று மதியம் நடைபெறுவதாக இருந்த சத்தியப்பிரமாண நிகழ்வு மாலை 5.30 மணிக்கே நடைபெற்றது. முன்னதாக இதனை தட்டிக்கழிக்க முடியாத சனாதிபதி பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதை அடுத்து மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆற்றுப்படுக்கை, ரஜரட்டை அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மகாவலித்திட்டம் எதற்குள் அடங்குகின்றது என்பது தெரிவிக்கப்படவில்லை. (32)

# புலிகளுடனான பேச்சுக்கு முழுமையான ஆதரவு வழங்குவோம்

## - கொழும்பு மாவட்ட பா.உ.தினேஷ்குணவர்த்தன

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண வேண்டும் என்ற சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் யோசனைக்கு எமது முழுமையான ஆதரவு உண்டு என ஐ.ம.சு.முன்னணியின் கொழும்பு மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்தார்.

சமாதானப்பேச்சுவார்த்தைமூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணவேண்டும் எனப்பதில் ஐ.ம.சு.மு. உறுதியாக இருக்கின்றது.

அந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிஎன்ற ரீதியில் எமது மக்கள் ஐக்கியமுன்னணி சமாதானப் பேச்சுவார்த்தை விடயத்தில் முழுமையான ஆதரவை வழங்கும்.

எமது கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இதற்கு கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்குமென அவர் மேலும் கூறினார்.

# அரசியல் வாதிகளின் தேவைகளை நிறைவேற்றுவதால் பொலிஸ் அதிகாரிகள் பயனடையப் போவதில்லை

## - பொலிஸ் ஆணைக்குழுத்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் அரசியல்வாதிகளின் தேவைகளை நிறைவேற்ற முற்படுவதால் எவ்வித பலனும் கிடைக்கப்போவதில்லை என தேசிய பொலிஸ் ஆணைக்குழு வின் தலைவரும் சனாதிபதி சட்டத் தரணி ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் இந்த உண்மை தெளிவாக புலப்பட்டதாக தெரிவித்த அவர்,

பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக அதிகாரங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றன. இந்நிலையில் கடமையை சரிவரச் செய்வதன் மூலமே பொலிஸ் அதிகாரிகள் பதவி உயர்வுகளை எதிர் பார்க்க முடியும் எனவும் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேயசூரிய தெரிவித்துள்ளார்.

### -கிளி.மருத்துவ சங்க ஏற்பாட்டில்-

# ஆங்கிலப் பயிற்சிப்பட்டறை மாணவர்கள் இரத்ததானம்

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் திருவையாறில் அமைந்துள்ள ஆங்கில பயிற்சிப்பட்டறை மாணவர்கள் 30பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு யாழ்.போதனாமருத்துவ மனையின் நடமாடும் இரத்தவங்கியினரும் கிளி. மாவட்ட மருத்துவமனையின் இரத்தவங்கியாளரும் இணைந்து மேற்படி 30பேரிடமும் இருந்து இரத்தத்தை பெற்றுள்ளனர். ஆண்,பெண் என இருபாலரிடமும் இருந்தும் பெறப்பட்ட இரத்தமானது அவசர உயிர்காப்பு நடவடிக்கைக்காக சேமித்துவைக்கப்படும் எனவும் இவ்வாறு இரத்தம் பெறப்படும் செயற்பாடு கிளி.மருத்துவ சங்கத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் எனவும் கிளி.மருத்துவசங்க செயலாளரும் கிளி.மாவட்டமருத்துவமனை மருத்துவருமான வைத்தியகலாநிதி யூடிறமேஸ் தெரிவித்தார். (ஜீ.லோ)

### கண்டெடுப்பு

தமிழீழ போக்குவரத்துக்கு உடமைப் பகுதிக்கு உரிய கடிதங்கள் அடங்கிய கோவை ஒன்று புதுக்காடு மருதங்கேணி வீதியில் கண்டெடுக்கப்பட்டு மருதங்கேணி காவல் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கோவையில் உடமைப்பகுதிக்குரிய குறிப்பிட்ட சில கடிதங்கள் உள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் காவல் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கின்றனர். (11)

### மட்டு..

பாதுகாப்புக் காரணத்தைக் கருத்திற்கொண்டு வெளியேறிய வடக்கு வைத்தியர்களில் 06 விசேட வைத்தியர்கள் நேற்று மீண்டும் கடமைக்குத் திரும்பியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வாழைச்சேனை வைத்தியசாலையில் பணியாற்றிய சிங்கள வைத்தியர்கள் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு நேற்றுமுன்தினம் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 11பேரில்..

இதில்கடந்த ஐ.தே.க அரசியல் தேசியப்பட்டியலில் இடம்பெற்றிருந்த கே.என்.சொக்ஸி பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் இம்முறையும் இடம்பெற்றுள்ளனர். நவின் திசாநாயக்க அலிசாகிர் மௌலானா இம்முறை ஐ.தே.கவின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகி உள்ளநிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இருந்து எம்.எஸ் செல்லச்சாமி வி.புத்திரசிகாமணி, மலையக மக்கள் முன்னணியில் இருந்து ராதாகிருஷ்ணன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த கே.எவ்.பாயிஸ் ஐ.குத்தாஸ் குசேன் மைலா டபிள்யூ எஸ் புஸ்பகுமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (32)

### காவலரண்கள்..

திற்கான மண்ணரண்களும் முன்னரங்கக் காவல் நிலைகளும் புனரமக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஐயம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கைகக்குப் பின்னர் கைவிடப்பட்டு இருந்த பல காவலரண்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (21)

### வாகரைப்..

வும்தற்பொழுது அப்பகுதியில் இருந்தும் கருணாகுழு விரட்டப்பட்டுள்ளதாகவும், இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மோதல்களில் இடையில் சிக்கிக்கொள்ளாது தப்பிக்க தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறியிருந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக வெருகல் ஆற்றைக் கடந்து வடக்கு நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நேற்றே திரும்பத் தொடங்கியுள்ளதாகவும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்து மாங்கேணிப் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் இன்று காலையில் திரும்பத் தொடங்குவார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### தமிழர்..

எம்மிடம் திரும்பி வந்துகொண்டிருக்கின்றார்கள். எனவே வீணான உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு எஞ்சியுள்ள போராளிகளை இணைந்து கொள்ளுமாறு கோருகிறோம்.

இதேவேளை தமிழ்த்தேசியத்திற்கான போராட்டத்தில் தமது பிள்ளைகளை மனமுவந்து இணைத்து வைத்த பெற்றோர்கள் கருணாவின் துரோகச்செயல்களுக்கு தமது பிள்ளைகளை பலியாக்கிவிடாது அவர்களை மீட்டு எடுத்துச்செல்லுமாறும், கேட்டுக்கொள்கிறோம்.

### ஊழியர்கள்...

லகம் ,சுகாதாரத் திணைக்களம் தெல்லிப்பளை வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்பன மேற்படி பகுதியில் உள்ள இராணுவஅதியுயர் பாதுகாப்பு வலயத்துள்ளேயே இயங்கி வருகின்றன.

இதனால் இவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள் கடமைக்குச் செல்லும் போது படையினரால் பல்வேறு சோதனைக் கெடுபிடிகளுக்கும் முகம் கொடுத்தே பின்தமது கடமைகளுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இதனால் தமது இயல்பான நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருவதாகவும், தமது மன உணர்வுகளை படையினரது இச்செயற்பாடுகள் பாதிப்பதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

### -விளையாட்டுத்துறை அமைச்சு கிடைக்கவில்லை-

# பதவி ஏற்பு வைபவத்திலிருந்து அர்ஜுன ரணதுங்க வெளிநடப்பு

(கொழும்பு)

விளையாட்டு அமைச்சர் பதவி கிடைக்காது ஏமாற்றம் அடைந்த ஐ.ம.சு. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க நேற்றைய அமைச்சர் சத்தியப்பிரமாண நிகழ்வில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளார்.

விளையாட்டு அமைச்சு பதவி அன்றேல் பிரதி அமைச்சு பதவி கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த அர்ஜுன ரணதுங்கவுக்கு இவற்றில் ஒன்றும் கிடைக்காத நிலையிலேயே வெளிநடப்பு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு அநுராபண்டாரநாயக்காவின் பிரதி அமைச்சுப்பதவி ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அவர் வெளிநடப்பு செய்ததை அடுத்து அப்பட்டியலில் இருந்தும் அர்ஜுனவின் பெயர் நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

# அமெ.சத்திரசிகிச்சை நிபுணர்கள் யாழ்.மருத்துவமனைக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவைச் சேர்ந்த இராணுவவைத்திய நிபுணர்கள் குழு ஒன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி யாழ். செல்லும் இக்குழு அங்கு தொடர்ந்து இரு வாரங்களிற்குத் தங்கியிருக்கும்.

அங்கு தங்கியிருக்கும் காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையில் இருக்கும் சத்திரசிகிச்சை மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களுக்கு விசேட பயிற்சிகளையும் இக்குழுவினர் வழங்குவர்.

இவ்வாறு வருகைதரும் இராணுவ வைத்திய நிபுணர்கள் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை, முறிவு நெறிவு சத்திரசிகிச்சை, வெடிவிபத்துக்காயங்களுக்கான சத்திரசிகிச்சை ஆகிய பல துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் மிகக் கடினமானது எனக் கருதப்படும் சில சத்திரசிகிச்சைகளையும் யாழ்.போதனாவைத்தியசாலையில் வைத்து மேற்கொள்வர். (33)

# புன்னாலைக்கட்டுவன் பகுதி காவலரண்கள் புனரமைப்பு

யாழ். புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள வலிகாமம் வடக்கு இராணுவ முன்னணிக்காவல் அரண்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த இரு தினங்களாக இடம்பெற்றுவரும் இந்நடவடிக்கைகளின் போது படையினரால் அரசு-புலிகளுக்கிடையிலான ஒப்பந்தத்தை தொடர்ந்து கைவிடப்பட்ட காவலரண்கள் மண்மூட்டைகள், மரக்குற்றிகள் கொண்டு புனரமைக்கப்பட்டு வருவதுடன், புதிய காவலரண்கள் மிக நெருக்கமாக நிறுவப்பட்டு வருவதாகவும் இந்நடவடிக்கைகளில் ஏராளமானபடையினர் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (33)

# தீவக அரசியல்துறை போராளிகளுக்கு ஈ.பி.டி.பி.யினர் கொலை மிரட்டல்

யாழ். தீவகக் கோட்ட அரசியல் துறை போராளிகள் மீது படையினரும், ஈ.பி.டி.பி.யினரும் இணைந்து கொலைமிரட்டல்களையும் அச்சுறுத்தல் களையும் விடுத்துள்ளனர்.

நேற்று மாலை ஊர்காவற்துறையில் உள்ள தீவக அரசியல்துறைச் செயலகத்தில் இடம் பெற்ற இச்சம்பவம்பற்றி தெரியவருவதாவது.

ஊர்காவற்துறையில் உள்ள தமது செயலகத்துள் இருந்த போராளிகள் தமது அரசியல் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை படையினர் மற்றும் பொலிசார் சகிதம் மேற்படி செயலகத்திற்குமுன் வந்திறங்கிய ஈ.பி.டி.பி.தேசவிரோதிகள் அப்பகுதியில் பெரும் அட்டகாசங்களிலும் அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் நிலவிய பரபரப்பை தொடர்ந்து தமது செயலக வாயிலில் நின்றவாறு சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த போராளிகளை துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியதுடன் கொலை செய்து விடுவோம் எனவும் மிரட்டிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)

### 31 அமைச்சர்..

கையில் சந்திரிகா முன்னணியில் இடம்பெற்றது. பின்வருவோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

*பிரதமர் மகிந்தராஜபக்ச- நெடுஞ்சாலைகள் அமைச்சர்
*அநுராபண்டாரநாயக்க- கைத்தொழில் சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு
*டி.எம்.ஜெயரட்ண- தபால், தொலைத் தொடர்புகள் மலையக அபிவிருத்தி
*அமரசிறிதொடங்கொட- பொதுநிர்வாக நிர்வாக மற்றும் சுதேச அலுவல்கள்
*நிமல்சிறிபாலடிசில்வா- சுகாதார மற்றும் போசாக்கு
*மங்களசமரவீர- துறைமுக மற்றும் விமான சேவைகள்.
*ஏ.எச்.எம்.பௌசி-சுற்றாடல் மற்றும் இயற்கைவளம்.
*லக்ஸ்மன் கதிர்காமர்-வெளியுறவுத் துறை
*ஜெயராஜ்பர்ணாண்டோபுள்ளே- கைத்தொழில் பாவனையாளர் அலுவல்கள்
*மைத்திரிபால சிறிசேன- ஆற்றுப் படுக்கை அபிவிருத்தி மற்றும் ராஜரட்டை அபிவிருத்தி.
*யோன்செனவிரட்ண- நீதிமற்றும் நீதித்துறைமறுசீரமைப்பு
*சுமேதாஜெயசேன- மகளிர் அபிவிருத்தி சமூகநலன்புரி
*சரத்அமுனுகம- நிதிஅமைச்சர்
*மில்ரோய்பெர்ணாண்டோ- கிறிஸ்தவ மற்றும் பாராளுமன்ற அலுவலர்.
*ஜீவன்குமரதுங்க- விளையாட்டுத் துறை இளைஞர் விவகாரம்.
*பவித்திரா வன்னியாராட்சி- சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு
*அநுரபிரியதர் சனயாப்பா- பெருந்தோட்டக்கைத்தொழில்.
*திஸ்ஸகரலியத்த- சுதேச மருத்துவம்
*தினேஸ் குணவர்த்தன நகரஅபிவிருத்தி, நீர் விநியோகம்.
*டக்ளஸ்தேவானந்தா- விவசாய விநியோகம் மற்றும் இந்துசமய அலுவல்கள் தமிழ் மொழிமூல பாடசாலைகள் மற்றும் வடமாகாண தொழிற்பயிற்சி.
*பேரியல் அஸ்ரப்- வீடமைப்பு நிர்மாணக்கைத்தொழில், கிழக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி.
*சுசில்பிரேமஜெயந்த- மின்வலு எரிசக்தி.
*அதாவுடசெனவிரத்தின- தொழிலாளர் உறவுகள் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சு.
*பியசேனகமகே- அபிவிருத்தித் தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி.
*ஜெனகபண்டாரதென்னக்கோன்- மாகாணசபை, உள்ளூராட்சி அலுவல்கள்.
*பீலிஸ்பெரேரா- போக்குவரத்து.
*சிவிரெத்னநாயக்க- தோட்டசமூக உட்கட்டமைப்பு.
*ஏ.எஸ்.எம்.அதாவுல்லா- கிழக்கு மாகாண உள்கட்டமைப்பு.
*றெஜினோட் குரே- தகவல் மற்றும் ஊடகத்துறை.
*திஸ்ஸவிதாரண- விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை.
*எஸ்.பி.நாவின்ன- கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.